# மே – 13 – திங்கள்

## தூய பாத்திமா அன்னைதிருவிழா

**என் நெஞ்சம் கடவுள்மீது, உயிருள்ள இறைவன்மீது தாகம் கொண்டுள்ளது: திபா. 42:2**

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி11 : 1 – 18**

அந்நாட்களில் பிற இனத்தவரும் கடவுளின் வார்த்தையை ஏற்றுக் கொண்டதைப் பற்றித் திருத்தூதர்களும் யூதேயாவிலுள்ள சகோதரர் சகோதரிகளும் கேள்விப்பட்டார்கள்.பேதுரு எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது, விருத்த சேதனம் செய்துகொண்டவர்கள் ”அவரோடு வாதிட்டனர்.”நீர் ஏன் விருத்தசேதனம் செய்துகொள்ளாதோரிடம் சென்று அவர்களுடன் உணவு உண்டீர்?” என்று குறை கூறினர்.பேதுரு நடந்தவற்றை ஒன்றன்பின் ஒன்றாக விளக்கிக் கூறத் தொடங்கினார்.”நான் யோப்பா நகரில் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தபோது மெய்ம்மறந்த நிலையில் ஒரு காட்சி கண்டேன். பெரிய கப்பற்பாயைப் போன்ற ஒரு விரிப்பு நான்கு முனைகளிலும் கட்டப்பட்டு வானத்திலிருந்து இறக்கப்பட்டு என்னிடம் வந்தது.அதை நான் கவனமாக நோக்கியபோது, தரையில் நடப்பன, ஊர்வன, வானில் பறப்பன, காட்டு விலங்குகள் ஆகியவற்றைக் கண்டேன்.”பேதுரு, எழுந்திடு! இவற்றைக் கொன்று சாப்பிடு” என்னும் ஒரு குரல் ஒலிப்பதையும் கேட்டேன்.அதற்கு நான், ”வேண்டவே வேண்டாம் ஆண்டவரே, தீட்டானதும் தூய்மையற்றதுமான எதுவும் ஒருபோதும் என் வாய்க்குள் சென்றதில்லை” என்றேன்.இரண்டாம் முறையும் வானிலிருந்து மறுமொழியாக, ”தூய்மையானது எனக் கடவுள் கருதுவதை தீட்டாகக் கருதாதே” என்று அக்குரல் ஒலித்தது.இப்படி மும்முறை நடந்தபின்பு யாவும் வானத்துக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டன. அந்நேரத்தில் செசரியாவிலிருந்து என்னிடம் அனுப்பப்பட்ட மூவர் நான் தங்கியிருந்த வீட்டின் முன் வந்து நின்றனர்.தூய ஆவியார் என்னிடம், ”தயக்கம் எதுமின்றி அவர்களோடு செல்” என்று கூறினார். உடனே நானும் இந்த ஆறு சகோதரர்களுமாக அந்த மனிதர் வீட்டுக்குச் சென்றோம்.அவர் தம் வீட்டில் வானதூதர் வந்து நின்றதைக் கண்டதாகவும், அத்தூதர் பேதுரு என்னும் பெயர் கொண்ட சீமோனை வரவழையும்நீரும் உம்வீட்டார் அனைவரும் மீட்புப் பெறுவதற்கான வார்த்தைகளை அவர் உம்மோடு பேசுவார் என்று தமக்குக் கூறியதாகவும் எங்களுக்கு அறிவித்தார்.நான் பேசத் தொடங்கியதும் தூய ஆவி முதலில் நம்மீது இறங்கி வந்தது போல் அவர்கள் மீதும் இறங்கி வந்தது.அப்போது, ”யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தார் ஆனால் நீங்கள் தூய ஆவியால் திருமுழுக்குப் பெறுவீர்கள்” என்ற ஆண்டவரின் வார்த்தைகளை நான் நினைவு கூர்ந்தேன்.இப்போதும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டபோது நமக்கு அருளப்பட்ட அதே கொடையைக் கடவுள் அவர்களுக்கும் கொடுத்தார் என்றால் கடவுளைத் தடுக்க நான் யார்?” என்றார்.இவற்றைக் கேட்டு அவர்கள் அமைதி அடைந்தனர் வாழ்வுக்கு வழியான மனம்மாற்றத்தைப் பிற இனத்தவருக்கும் கடவுள் கொடுத்தார் என்று கூறி அவரைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

**பதில்பாடல் :** உயிருள்ள இறைவன் மீது என் நெஞ்சம் தாகம் கொண்டுள்ளது.

**நற்செய்தி : யோவான் 10 : 1 - 10**

அக்காலத்தில் இயேசு கூறியது : ”நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் ஆட்டுக்கொட்டிலில் வாயில் வழியாக நுழையாமல் வேறு வழியாக ஏறிக்குதிப்போர் திருடர் அல்லது கொள்ளையராய் இருப்பர்.வாயில் வழியாக நுழைபவர் ஆடுகளின் ஆயர்.அவருக்கே காவலர் வாயிலைத் திறந்துவிடுவார். ஆடுகளும் அவரது குரலுக்கே செவிசாய்க்கும். அவர் தம்முடைய சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு வெளியே கூட்டிச்செல்வார்.தம்முடைய சொந்த ஆடுகள் அனைத்தையும் வெளியே ஓட்டிவந்தபின் அவர் அவற்றிற்கு முன்செல்வார். ஆடுகளும் அவரைப் பின்தொடரும். ஏனெனில் அவரது குரல் அவற்றுக்குத் தெரியும்.அறியாத ஒருவரை அவை பின் தொடரா. அவரை விட்டு அவை ஓடிப்போகும். ஏனெனில் அவரது குரல் அவற்றுக்குத் தெரியாது”. இயேசு அவர்களிடம் உவமையாக இவ்வாறு சொன்னார். ஆனால் அவர் சொன்னதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. மீண்டும் இயேசு கூறியது. ”உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் ஆடுகளுக்கு வாயில் நானே.எனக்கு முன்பு வந்தவர் அனைவரும் திருடரும் கொள்ளையருமே. அவர்களுக்கு ஆடுகள் செவிசாய்க்கவில்லை.நானே வாயில். என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர் வெளியே வருவர் மேய்ச்சல் நிலத்தைக் கண்டுகொள்வர்.திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்குமன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை. ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்” என்றார்.

**தியானம்:** ஆடுகள், ஆட்டு மந்தை, ஆயன் ஆகிய உருவகங்கள் கடவுளையும் கடவுள் அன்பு செய்கின்ற மக்களையும் குறிப்பதற்குப் பயன்பட்டன. பழைய ஏற்பாட்டில் இவ்வுருவகங்கள் பல இடங்களில் காணப்படுகின்றன (காண்க: திபா 23 எசா 40:41 எரே 32:1-3 எசே 34:11-15). அது போலவே, புதிய ஏற்பாட்டில் இயேசு தம்மை ““நல்ல ஆயனாக““ அறிவிக்கிறார் (காண்க: மத் 9:36 18:12-13 மாற் 6:34 லூக் 15:3-7 யோவா 10:1-30 1 பேது 2:25). இயேசு நம் நல்ல ஆயர் என்றால் நாம் அவருடைய மந்தை. ஆட்டு மந்தை என்றதும் சிலர் எதிர்மறையாகப் பார்ப்பதுண்டு. அதாவது, சுய சிந்தனை இல்லாமல் கூட்டத்தோடு கூட்டமாகச் செல்கின்ற போக்கு ““மந்தை மனப்பான்மை““ எனப்படுவதுண்டு. ஆனால் இயேசு குறிப்பிடுகின்ற மந்தை இத்தகைய சிந்தனையற்ற கும்பல் அல்ல. கடவுள் அன்போடும் பாசத்தோடும் பராமரிக்கின்ற மக்களே இங்கு ““மந்தை““ என்னும் உருவகத்தால் குறிக்கப்படுகின்றனர். பாலஸ்தீன நாட்டில் ஆடு மேய்க்கும் பணி சிறிது வித்தியாசமாக நடக்கும். அதாவது, ஆயர் தம் ஆடுகளை ஓட்டிச் செல்வதில்லை, மாறாக அவற்றிற்கு முன் தாம் நடந்துசென்று வழிகாட்டுவார். ஆடுகள் ஆயரைப் ““பின்தொடரும்““. அவ்வாறு வழிநடத்தும்போது ஆயர் தம் ஆடுகளைப் பெயர் சொல்லி அழைப்பதும் உண்டு. ஆயரின் குரலை ஆடுகள் அடையாளம் கண்டுகொள்வதால் அவை ஆயரின் அடிச்சுவட்டில் நடந்து செல்லும். இந்த உருவகத்தை இயேசு தமக்குப் பொருத்தி உரைக்கிறார். இயேசுவின் அன்புக்கு உரிய நாம் அவருடைய குரலைக் கேட்கின்றோம். அவர் நம் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைக்கிறார். எனவே கடவுளின் அழைத்தலுக்குச் செவிமடுக்கும் போது நாம் ஒவ்வொருவரும் கடவுளின் அன்பைத் தனிப்பட்ட விதத்தில் உணர்கிறோம். அதே நேரத்தில் கடவுள் தம் மந்தையை ஓர் அன்புச் சமுதாயமாக உருவாக்குகிறார். அச்சமுதாயம் அன்புப் பிணைப்பால் இணையும். இஸ்ரயேல் மக்களைக் கடவுள் முன்னின்று வழிநடத்திய போது மக்கள் பயமின்றி அவரைப் பின்தொடர்ந்தனர். எகிப்திய நாட்டில் அடிமைகளாக இருந்த நிலையைக் கடந்து சென்று கடவுள் வாக்களித்த நாட்டில் சுதந்திர மக்களாகக் குடியேறினார்கள். இயேசு நம் நல்ல ஆயராக இருப்பதால் அவர் முன்செல்ல நாம் அவரைப் பின்செல்ல அழைக்கப்படுகிறோம். அவர் வழிநடந்த பாதை சிலுவைப் பாதை. அவ்வழியில் செல்வோர் துன்பத்தையும் சாவையும் சந்திக்க நேரிடும். ஆனால் சாவின் வழியாக வாழ்வு பிறக்கும் என்னும் நம்பிக்கை நமக்கு உண்டு. நம் ஆயர் இயேசுவை நமக்கு இந்நம்பிக்கையைத் தருகின்றார். அவர் சென்ற வழியில் நாம் சென்றால் நிலைவாழ்வு நமக்குக் கடவுளின் கொடையாக வழங்கப்படும்.